இவற்றைப் பெற விரும்புவோர் ரூபா 250/-இனை மீளளிக்கத்தகாத வைப்புப் பணமாகவும் ரூபா 3,000/- இனை மீளளிக்கத்தக்க வைப்புப்பணமாகவும் யாழ் பல்கலைக்கழக காசாளரிடம் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும். முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்களை 25-11-93 காலை 10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் அன்றைய தினம் 10.30 மணிக்கு திறக்கப்படும். கேள்விப்பத்திர உறையின் இடது பக்க மூலையில் "மரத்தளபாட கேள்விப்பத்திர விண்ணப்பம்" என குறிப்பிடப்படல் வேண்டும்.

பதிவாளர்.

(சி-7923)


அன்பாகள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்

எங்கள் அன்பு கலந்த தீபாவளி நல்வாழ்த்துக்கள் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம்

"சிறந்த படப்பிரதிகளுக்கு என்றும்"

குணம் வீடியோ சென்ரர்

42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

(சி-7905)

வாடிக்கையாளர்களுக்கு எமது இதயம் கனிந்த இனிய

தீபாவளி வாழ்த்துக்கள்

இன்றே விஜயம் செய்யுங்கள்

# நியூ விக்ரேஸ் எலெக்ரோனிக் கொம்பிளெக்ஸ்

05, **B. M. C** ஒழுங்கை, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-7898)



வகைகள்!

ஸ்பெசல் ஐஸ்கிறீம் புறூட் சலட் ஐஸ்கிறீம்
சொக்லட் ஐஸ்கிறீம், வனிலா ஐஸ்கிறீம்
மற்றும் சர்பத், கிறீம் சர்பத், ஐஸ் கோப்பி
அனைத்து குளிர்பான வகைகளுக்கும், சுவைமிகு
கோழிப்புரியாணி வகைகளுக்கும் மீண்டும்

★ உங்களை அழைக்கின்றார்கள் ★

"ஹொட்டல் றொலெக்ஸ் ஸ்தாபனத்தார்"

## ஹொட்டல் றொலெக்ஸ்

340, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(சி-7867)



நல்வாழ்த்துக்கள்

தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம்

"சிறந்த படப்பிரதிகளுக்கு என்றும்"

## குணம் வீடியோ சென்ரர்

42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

(சி-7905)



இளமைக்கு அழகேற்றி அழகுக்கு மெருகூட்டும் அழகிய கண்கவர்
22ct தங்க நகைகளை ஓடர் செய்து பெற்றுக் கொள்ள
நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்

# நியூ லலிதா ஜுவல்லர்ஸ்

திருமணஓடர் நகைகளை ஒரே இடத்தில் உங்கள்
வசதிக்கேற்ற முறையில் விலை நிதானத்துடன் செய்து பெற்றுக்கொள்ளவும்,
பழைய பவுண் பொன், வெள்ளி ஆகியவற்றை கூடிய விலையில் விற்கவும் நீங்கள் நாடவேண்டிய இடம்



தரம் நாடுவோர் தவறாமல் நாடுமிடம்

அன்றைய நாளிலும் இன்றைய சூழ்நிலையிலும் உங்களின் தேவை அறிந்து சேவை செய்பவர்கள்

# நியூ லலிதா ஜுவல்லர்ஸ்

74/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-7891)



வாடிக்கையாளர்களுக்கு எமது
இதயம் கனிந்த இனிய

## தீபாவளி வாழ்த்துக்கள்

நவீன
நாகரிகத்திற்கேற்ற
நங்கையர் விரும்பும்

- கூறைச் சாறிகள்
- காஞ்சிபுரம் சாறிகள்
- பட்டுவேட்டி சால்வைகள்

இன்னும் பல

உங்கள் தேவையை முழுமையாக பூர்த்தி செய்ய
நீங்கள் நாடவேண்டிய இடம்

## ★ கணேசன் ★
ஸ்ரோர்ஸ்

201, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(சி-7911)



எங்கும் மங்களம் உண்டாக

## எம் தீபாவளி நல்வாழ்த்துக்கள்

- ஆதரவாளர்களின் ஆவல் அறிந்த சேவை!
- மங்கள வைபவங்களுக்கானபட்டுப்புடைவைகள்!!
- இறக்குமதி செய்யப்பட்ட ஆடைத்தினிசுகள்!!!

முகூர்த்தப் பட்டுப் புடைவைகளை
உங்கள் விருப்பத்திற்கு ஏற்ப
தெரிவு செய்ய நாடும் இடம்

## மதுரா பட்டு மகால்

சோபனா ஆடை அகம்,
75, 16, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

(சி-7908)

சிந்தனைக்கு

அறிந்தவனுக்கு அறிவுரை தேவையில்லை
அறியாதவனுக்கு அறிவுரை கூறிப்பயனில்லை

செனேகா

ஈழநாதம்

1, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 13-11-1993

தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2873

த பெ. எண் - 05

## வரலாற்றுச் சாதனை

"சிறிலங்கா இராணுவம் தனது நிலையை உணர்ந்து கொள்ளவும், இராணுவத்தால் எதைச்சாதிக்க முடியும் என்பதை அரசு புரிந்து கொள்ளவும் விடுதலைப் புலிகள் பூநகரி படைத் தளத்தைத் தாக்கி அழித்தமை நல்லதொரு எடுத்துக்காட்டு ஆகும் என பத்திரிகையாளர் அமல் ஜெயசிங்கா பி.பி.சிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்திருந்தமை மிகவும் நிதானமானதும், யதார்த்த நிலையின் அடிப்படையிலும் எழுந்த மதிப்பீடாகும்.

இனப்பிரச்சினை விடயத்தில் சிறிலங்கா அரசாங்கமானது 'கெடு குடி சொற் கேளாது' என்ற நிலைப்பாட்டையே கொண்டிருக்கின்றது. ஒரு தேசிய இனப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு சாத்தியமாகப் போவதில்லை என பலர் எடுத்துக் கூறிய போதும், அதனை சிறிலங்கா அரசு கருத்திற் கொள்ளவில்லை. உலக அனுபவத்தின் அடிப்படையில் எடுத்துக் கூறப்பட்ட இவ் அறிவுரையானது, சிறிலங்கா அரசிற்கு விழலுக்கிறைத்த நீராகவே இருந்தது.

இந் நிலையில் தான், கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இராணுவ கடற்படைக் கூட்டுத் தளத்தை சிறிலங்கா படைகள் இழந்துள்ளன. இம் முகாம் இழப்பானது, சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் குடாநாட்டின் மீதான போர் யுத்திக்குக் கிடைத்த படுதோல்வி என்பதோடு, இராணுவத்திற்குப் பெரும் பின்னடைவு என்பதிலும் சந்தேகமில்லை.

பூநகரி இராணுவ - கடற்படை கூட்டுத் தளம் யாழ் குடாநாட்டுடன் இருந்த தரைவழித் தொடர்பை - சிறு பகுதி கடலால் பிரிக்கப்படுகின்றது - துண்டிக்கும் முக்கிய நோக்கில் அதாவது குடாநாட்டை முற்றுகையிடும் நோக்கில் அமைக்கப் பட்டதாகும். ஆனால், இத்தரை வழித் தொடர்பு துண்டிக்கப்பட்டமையானது, சிறிலங்கா அரசாங்கம் எதிர்பார்க்கப்பட்டது போன்று யாழ். குடாநாட்டின் மீதான முற்றுகையை பூர்த்தி செய்ய உதவவில்லை. கொம்படி பின்னர், கிளாலி என வழிகள் திறக்கப்பட்டன. இருப்பினும் மக்கள் பயணத்தின் போது பெரும் துன்பங்களை அனுபவிக்க வேண்டி இருந்தமை உண்மையே.

இதற்கும் மேலாக யாழ். குடாநாட்டின் மீதான தாக்குதலுக்கான முன்னோடி நடவடிக்கையாகவே இம் முற்

# பூநகரி மீதான தாக்குதல் அரசிற்கு ஒரு படிப்பினை

**-அமல் ஜெயசிங்கா**

பூநகரி யுத்தம் ஒரு திருப்பு முனையாக அமையுமென்று நம்புகிறேன். இராணுவத்துக்கு அதன் வரையறை இப்போது தெரிந்திருக்கும். இராணுவத்தினரால் எதனை அடையமுடியும் என்பதை அரசும் இப்போது உணர்ந்து கொண்டிருக்கும். எல்லோரும் இப்போது தங்கள் பலத்தின் அளவை விளங்கியிருப்பார்கள். அவர்கள் பேச்சுவார்த்தையை இனி ஆரம்பிப்பார்கள் என்று நான் நினைக்கிறேன். இவ்வாறு பத்திரிகையாளர் அமல் ஜெயசிங்கா பி.பி.சிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்;

பல திசைகளிலிருந்தும் இராணுவத்தினர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதனால் முகாம் குழம்பிப் போயிருந்தது. இத் தாக்குதல் புலிகளின் ஒரு பாரிய தாக்குதலாகும். பலவிதமான ஆயுதங்களையும் உபயோகித்துப் புலிகள் தாக்குதலை நடத்தினார்கள். புலிகள் தங்கள் முழுப் பலத்தையும் கொண்டு தாக்கினார்கள்.

இழப்புக்களைப் பற்றிய விபரம் சரியாகத் தெரியவில்லை. சுமார் இருநூறுபேர் சண்டையில் செத்திருக்கலாம் அல்லது காயப்பட்டிருக்கலாம். இராணுவம் தாம் ஐம்பது புலிகளைக் கொன்றதாகச் சொல்கிறார்கள். ஆனால், இவையெல்லாம் உறுதி அளிக்கப்படாத செய்திகள். உதவிகள் சண்டை நடந்த இடத்தைச் சென்றடைய முடியாத நிலை உள்ளது. இப்போது உடனடியாக இழப்புக்களைப் பற்றிய சரியான விபரங்களை இராணுவத்தால் சொல்ல முடியாது என்றார்.

படையினர் சிலர் சுற்றி வளைக்கப்பட்டிருப்பதாக இராணுவம் கூறுகிறது. அவர்கள் சண்டையிட்டுத் தான் வெளியேற வேண்டும். இராணுவம் புலிகளால் சுற்றி வளைக்கப்பட்டுள்ள படையினருக்கு உதவிகளை அனுப்பமுடியாத சங்கடமான நிலையில் உள்ளது. ஹெலிக்கப்டர்கள் கூட அங்கு இறக்க முடியாத நிலை. ஹெலிகொப்டர்களும் தாக்கப்பட்டுள்ளன. இராணுவம் பிரஸ்தித் தாக்குதல் மற்றும் வான் தாக்குதலைச் செய்யமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. அப்படிச் செய்தால் யுத்த முனையில் சிக்கியுள்ள இராணுவத்தினரே அதனால் பாதிக்கப்படுவர்.

நாட்டில் இனப்பிரச்சினை என்று ஒன்றுமில்லை என்று ஜனாதிபதி விஜேதுங்க கூறுகிறார்.

அரசுக்கு தமது நிலைப்பாட்டை விளக்க வைப்பதற்கு புலிகள் கையாளும் வழி இதுவாகும். யாழ். குடாநாட்டில் தாம் விரும்பியபோது எதையும் சாதிக்கலாம் என்பதை இச் சம்பவம் காட்டுகிறது. இது பாதுகாப்புப் படைக்கும் ஒரு சவாலாகும்.

இந்த யுத்தத்தின் பிறகு அரசு தேர்தல் நடத்துவதைக் குறிப்பாகக் கிழக்கு மாகாணத்தில் தேர்தல் நடத்துவதைக் கைவிடக்கூடும். புலிகளின் தாக்குதல் இதனை உணர்த்தியுள்ளது. வடபகுதியிலிருந்து படைகளை எடுத்து வேறொரு பகுதிக்குப் படைகளை அனுப்ப முடியாது என்பதுதான் அது. வடக்கில் இருந்து படைகளில் ஒரு பகுதியினரை எடுத்துக் கிழக்கில் பாதுகாப்பை ஏற்படுத்தி உள்ளூராட்சித் தேர்தலை நடத்தமுடியாது. ஆகவே கிழக்கில் தேர்தல் நடத்துவதை அரசு கைவிட வேண்டியதுதான்.

இவ்வாறு அமல் ஜெயசிங்க மேலும் தெரிவித்தார்.

## ஆங்கில ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்

அரச பாடசாலைகளிலுள்ள ஆங்கில ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியர்களையும், ஓய்வு பெற்ற அரச உத்தியோகத்தர்களையும் மற்றும் ஆங்கிலம் கற்பிக்கத் தகுதி வாய்ந்தவர்களையும் பகுதி நேர அடிப்படையில் பணிக்கமர்த்துவதற்கு கல்வி, உயர் கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளது.

விண்ணப்பங்கள், விண்ணப்பதாரியின் சொந்தக் கையெழுத்தில் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, அவர் விரும்பும் பிரதேசத்திற்குரிய மாவட்டக் கல்விப் பணிப்பாளரின் அலுவலகத்திற்கு 17-11-1993 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும் எனக் கோரப்படுகின்றனர்.

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களில் தமது முழுப் பெயர், முகவரி, பிறந்ததிகதி, 17-11-93 அன்று வயது, பால், கல்வித் தகைமைகள் தொழிற் தகைமைகள் ஆங்கிலத்திலுள்ள தேர்ச்சி சம்பந்தமான அத்தாட்சி, முன்புஏதும்பதவி வகித்திருப்பின் அப்பதவியின் பெயர், அப்பதவியின் தன்மை, அனுபவமும் சேவையும், இப்பதவிக்கு நியமனம் கோருவதற்கு அவருக்குத் தகைமை பவிக்கும் வேறேதும் விசேட காரணிகள் இருப்பின் குறிப்பிடப்படல் வேண்டும். அவரது விருப்புரிமை ஒழுங்கின் பிரகாரம் அவர் நியமனம் பெற விரும்பும் மூன்று பாடசாலைகளின் பெயர்கள், அப் பாடசாலைகளின் பெயர்களுக்கெதிரே அவையமைந்துள்ள கல்விப் பிரதேசம்/ கல்விப்பிரதேசங்கள் என்பவற்றைக்குறிப்பிடுதல் வேண்டும். பெற்றுள்ள கல்வித் தகைமைகள் எந்தமொழி மூலம் பெற்றுள்ளவை என்பது குறிப்பிடப்படல் வேண்டும்.

தற்பொழுது பகுதிநேர அடிப்படையில் ஆங்கிலம் கற்பித்துக் கொண்டிருக்கும் அனைவரும் தவறாது இவ்விண்ணப்பத்தை அனுப்புதல் வேண்டும் அன்றேல் 01-01-1994 தொடக்கம் தமது நியமனத்தைப் பெறமாட்டார்கள் எனவும் அறிவிக்கப்படுகிறது.

மாகாண கல்விப் பணிப்பாளரே நியமிக்கப்படவேண்டியவர்களைத் தெரிவு செய்வார்.

### கப்பலில் ஏற்ற மறுப்பு

(வடமராட்சி)

பருத்தித்துறை துறைமுகத்தில் தரித்து நின்ற 'குமண' கப்பல் மூலம் கொழும்புக்குப் புறப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் கப்பலில் வைத்து திருப்பி அனுப்பப்பட்டார்.

நேற்று முன்தினம் மாலை கப்பலுக்குச் சென்றிருந்த இவரை கப்பல் கப்டன் காங்கேசன்துறை கடற்படையினரின் அனுமதி கிடைக்கவில்லையெனத் தெரிவித்து ஏற்றிச் செல்ல மறுத்துள்ளார். (யோ)

# கட்சி அனுமதியுடன் இலங்கைக்கு சென்றேன்

**வை. கோபால்சாமி தெரிவிப்பு**

(சென்னை)

இலங்கைசென்றிருந்த நான் உயிருடன் திரும்பமாட்டேன் என்று உணர்ந்த கருணாநிதி எனது கடிதத்தை மார்ச் 4 ஆம் திகதி பத்திரிகைகளுக்கு விடுத்தார் என வை. கோபால்சாமி தெரிவித்துள்ளார்.

நீண்டகாலத்திற்கு பின் இக் கடிதம் தனக்கு கிடைத்ததாகக்கூறியே அவர் அதை பத்திரிகைகளுக்கு விடுத்தார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கட்சியின் அனுமதியின்றி, யாழ். சென்றேன் என்ற குற்றச்சாட்டை நான் மறுக்கிறேன். இதுகுறித்து 1989 பெப்ரவரி 8ஆம் திகதி நான் எழுதிய கடிதம் ஒன்றை எனது நண்பர் ஒருவர் மூலம் கருணாநிதியின் இல்லத்திற்கு அனுப்பி வைத்தேன்.

இந்தியப் படையினரால் கொல்லப்படுவதாகச் சொல்லப்பட்ட இலங்கைத் தமிழ் மக்களுக்கு பாதுகாப்பை உறுதிப்படுத்துமுகமாகவும்இந்திய அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு ஒன்றை காண வேண்டும் என்ற கருணாநிதியின் கருத்திற்கு விடுதலைப் புலிகள் இணங்குகிறார்களா என்பதை அறியும் பொருட்டும் நான் வவுனியா செல்வதாக அக்கடிதத்தில் எழுதியிருந்தேன்.

எனது இந்த விஜயத்தினால் விடுதலைப்புலிகள் இந்தியப்

## லிபியாவுக்கு எதிராக பொருளாதாரத் தடை?

## மூன்று பரீட்சைகளுக்கு வினாத்தாள்கள் வந்தன

(வடமராட்சி)

யாழ். மாவட்டத்தில் நடைபெறவுள்ள மூன்று பரீட்சைகளுக்கான வினாத்தாள்கள் கொழும்பில் இருந்து கல்வித் திணைக்களத்திற்கு நேற்று எடுத்துவரப்பட்டன.

எழுது வினைஞர்களுக்கான பதவிஉயர்வுப் பரீட்சை தொழில்நுட்பம் என்.எம்.ரி. பழைய பாடத்திட்டப் பரீட்சை, கணக்குப் பரிசோதகர் பரீட்சை ஆகிய பரீட்சைகளுக்கான வினாத்தாள்கள் அனுமதி அட்டைகளும் மற்றும் டிசம்பர் 6 ஆம் திகதி நடைபெறவுள்ள க.பொ.த. சாதாரணப் பரீட்சைக்குரிய காகிதாதிகளும் யாழ். கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த ஏ. சுப்பிரமணியம் அவர்களால் எடுத்துவரப்பட்டன.

(யோ)

## அமைச்சர் ரணசிங்கவிது ஒழுக்காற்று நடவடிக்கை?

[கொழும்பு]

அமைச்சர் ஏ.ஜே ரணசிங்க மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு ஐ.தே.க. குழு தீர்மானம் எடுத்துள்ளது.

அண்மையில் அங்கிலப் பத்திரிகை... பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சிரேஷ்ட அமைச்சர்களும் உறுப்பினர்களும் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க தலைமையில்

சிறிலங்கா படைகள் இழந்துள்ளன. இம் முகாம் இழப்பானது, சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் குடாநாட்டின் மீதான போர் யுத்திக்குக் கிடைத்த படுதோல்வி என்பதோடு, இராணுவத்திற்குப் பெரும் பின்னடைவு என்பதிலும் சந்தேகமில்லை.

பூநகரி இராணுவ - கடற்படை கூட்டுத் தளம் யாழ் குடாநாட்டுடன் இருந்த தரைவழித் தொடர்பை - சிறு பகுதி கடலால் பிரிக்கப்படுகின்றது - துண்டிக்கும் முக்கிய நோக்கில் அதாவது குடாநாட்டை முற்றுகையிடும் நோக்கில் அமைக்கப் பட்டதாகும். ஆனால், இத்தரைவழித் தொடர்பு துண்டிக்கப்பட்டமையானது, சிறிலங்கா அரசாங்கம் எதிர்பார்க்கப்பட்டது போன்று யாழ். குடாநாட்டின் மீதான முற்றுகையை பூர்த்தி செய்ய உதவவில்லைகொம்படி பின்னர், கிளாலி என வழிகள் திறக்கப்பட்டன. இருப்பினும் மக்கள் பயணத்தின் போது பெரும் துன்பங்களை அனுபவிக்க வேண்டி இருந்தமை உண்மையே.

இதற்கும் மேலாக யாழ். குடாநாட்டின் மீதான தாக்குதலுக்கான முன்னோடி நடவடிக்கையாகவே இம் முற்றுகை இடம் பெற்றது. இம் முற்றுகை மூலம் விடுதலைப் புலி போராளிகளின் நகர்ச்சியைக் கட்டுப்படுத்தவும், இதன் மூலம் இராணுவ வெற்றியை இலகுவில் எட்டிவிடவும் அரசு முயற்சித்தது.

ஆனால் பூநகரி முகாம் வீழ்ச்சியானது சிறிலங்கா அரசாங்கத்தினதும், இராணுவத்தின் நோக்கங்களைச் சிதைத்தன. இது இராணுவத்திற்கு ஏற்பட்ட பலத்த பின்னடைவு என்பதிலும் கேள்விக்கே இடமில்லை. சிறிலங்கா ஜனாதிபதியும், இராணுவத் தளபதியும் இனப்பிரச்சினைக்கு மிகவிரைவில் தீர்வு காணப்படும். விரைவில் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்படுவார்கள் என பிரசாரத்தில் ஈடுபட்டுள்ள வேளையில் ஏற்பட்டுள்ள இத் தோல்வியானது ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கவிற்கும், இராணுவத் தளபதிக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கும என்பதிலும் சந்தேகமில்லை.

ஏனெனில், தாக்கி அழிக்கப்பட்ட இராணுவ கடற்படை முகாமானது கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த முகாம் மட்டுமல்ல. 20 கிலோமீற்றருக்கு மேற்பட்ட சுற்றளவைக் கொண்டதும், சுமார் 1200 துருப்புக்களைக் கொண்ட பலமான முகாமும் ஆகும். இம்முகாமை தாக்கி அழித்தல் என்பது இலகுவான காரியமல்ல. இந்நிலையில், புலிகள் இம்முகாமை வெற்றி கொண்டமை ஒரு வரலாற்று சாதனையும் ஆகும். இச் சாதனையை இனி எந்த நிலையும் எவ்வேளையும் எவரும் மறுத்து விடமுடியாது.

இந்நிலையில், இத்தாக்குதலானது சிறிலங்கா இராணுவத் தரப்பு யாழ். குடாநாட்டின் இராணுவ முற்றுகை குறித்தும், யாழ். குடாநாடு மீதான தாக்குதல் குறித்துமான யுத்த தந்திரோபாயம் பற்றியும் மீள்பரிசீலனை செய்ய வேண்டிய அவசியத்தையும், கட்டாயத்தையும் ஏற்படுத்தியுள்ளது எனலாம், அதாவது. யாழ். குடாநாட்டு முற்றுகையும் அதன் மீதான தாக்குதலையும் இலகுவில் மேற்கொண்டுவிட முடியாதவை என்பதை புலிகள் ராணுவத் தலைமைக்குத் தெளிவாகவே உணர்த்தியுள்ளனர்.

இதேவேளை சிறிலங்கா அரசியற் தலைமை இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வையே தொடர்ந்து நாடுமானால், அது எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தும் என்பதையும் அதனால், நன்மை எதும் கிட்டப்போவதில்லை என்பதையும் அரசிற்குப் புரிய வைத்துள்ளனர். கடந்த காலங்கள்போல் இதனையும் அரசு புரிந்துகொள்ளத் தவறின் அதற்கான முழுப்பொறுப்பையும் சிங்கள அரசியற் தலைமையே எற்க வேண்டும்.

# இலங்கைக்கு சென்றேன்

## வை. கோபாலசாமி தெரிவிப்பு

(சென்னை)

இலங்கைசென்றிருந்த நான் உயிருடன் திரும்பமாட்டேன் என்று உணர்ந்த கருணாநிதி எனது கடிதத்தை மார்ச் 4 ஆம் திகதி பத்திரிகைகளுக்கு விடுத்தார் என வை.கோபாலசாமி தெரிவித்துள்ளார்.

நீண்டகாலத்திற்கு பின் இக்கடிதம் தனக்கு கிடைத்ததாகக்கூறியே அவர் அதை பத்திரிகைகளுக்கு விடுத்தார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கட்சியின் அனுமதியின்றி, யாழ். சென்றேன் என்ற குற்றச்சாட்டை நான் மறுக்கிறேன். இதுகுறித்து 1989 பெப்ரவரி 8ஆம் திகதி நான் எழுதிய கடிதம் ஒன்றை எனது நண்பர் ஒருவர் மூலம் கருணாநிதியின் இல்லத்திற்கு அனுப்பி வைத்தேன்.

இந்தியப் படையினரால் கொல்லப்படுவதாகச் சொல்லப்பட்ட இலங்கைத் தமிழ் மக்களுக்கு பாதுகாப்பை உறுதிப்படுத்துமுகமாகவும்இந்திய அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு ஒன்றை காண வேண்டும் என்ற கருணாநிதியின் கருத்திற்கு விடுதலைப் புலிகள் இணங்குகிறார்களா என்பதை அறியும் பொருட்டும் நான் வவுனியா செல்வதாக அக்கடிதத்தில் எழுதியிருந்தேன்.

எனது இந்த விஜயத்தினால் விடுதலைப்புலிகள் இந்தியப் படையினருக்கிடையிலான மோதல் அதிகரித்தது என்பது தவறானது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# லிபியாவுக்கு எதிராக பொருளாதாரத் தடை?

## ஐ. நா. பாதுகாப்பு சபை ஒப்புதல்

(ஜெனீவா)

1988ஆம் ஆண்டில் லொக்கர்பீக்கு உயரே பான் எம் விமானம் குண்டுவெடிப்பில் சிக்கிய சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்று கூறப்படும் இருவரை அமெரிக்காவிடம் ஒப்படைக்க லிபியா தொடர்ந்து மறுத்து வருவதால் அந்நாட்டிற்கு எதிரான பொருளாதாரத் தடைகளை தீவிரமாக்க ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை ஒப்புதல் அளித்துள்ளது.

எனினும் எண்ணெய் வாணிபம் தொடர்பாக லிபியா மீது கட்டுப்பாடு விதிக்க அமெரிக்கா முயன்றபோதும் அதற்கு ஆதரவளிக்க மற்ற ஐரோப்பிய நாடுகள் மறுத்து விட்டன

லிபியா ஒத்துழைக்க மறுத்தால் அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் இந்தத் தடைகள் அமுலுக்கு வரலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆயுதங்களை கைவிட்டு சரணடைய வேண்டும்

## தீவிரவாதிகளிடம் கோரிக்கை

(டில்லி)

ஹர்சத்பால் தர்காவினுள் தஞ்சம் புகுந்துள்ள தீவிரவாதிகள் தங்கள் ஆயுதங்களை கீழே வைத்துவிட்டு புனித தலத்தை விட்டு வெளியே வந்து சட்டம் ஒழுங்கு முறைகளை ஏற்று நடக்க வேண்டும் என்று தெளிவாகக் கூறப்பட்டிருப்பதாக இந்திய அரசுத் தரப்பில் பேச்சுவார்த்தை நடத்திவரும் தலைமைப் பிரதிநிதி மஹ்மூது ரகுமான் கூறியுள்ளார்.

இருபத்தெண்பதாவது நாளாக நீடிக்கும் முற்றுகையை முடிவுக்கு கொண்டுவரும் முகமாக நேற்று மூன்றினம் தீவிவாதிகளுடன் ஒரு மணிநேரத்திற்கும் கூடுதலாக பேச்சுவார்த்தை நடத்திய அவர் பின்னர் செய்தியாளர்கள் மத்தியில் பேசுகையில் இதனைத் தெரிவித்தார். மேலும் கூறுகையில் அரசு அவர்களை மனிதாபிமான முறையிலும் நியாயமாகவும் நடத்தும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதனிடையே ஹர்சத்பால் புனித தலத்திற்குஅருகாமையிலுள்ள காஷ்மீர்பள்ளத்தாக்கிலிருந்து மேலும்ஆயுதங்களும், வெடிப் பொருட்களும்படையினரால் கைப்பற்றப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

# வெள்ளப்பாதிப்பு பகுதிக்கு முதல்வர்ஜெயலலிதா விஜயம்

(சென்னை)

தமிழ்நாட்டில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மூன்று மாவட்டங்களையும் மாநில முதல்வர் செல்வி ஜெயலலிதா நேற்று சுற்றிப் பார்வையிட்டார். சென்னையிலிருந்து உலங்கு வானூர்தி மூலம் திண்டுக்கல் அண்ணா மாவட்டத்திற்கு சென்ற அவர் அங்கு பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்ட பின்னர் மதுரைக்கு சென்றார். அங்கிருந்து திரும்பும் வழியில் திருச்சி மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை உலங்கு வானூர்தியிலிருந்தே பார்வையிட்டார்.

இதேவேளை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு போர்க்கால அடிப்படையில் நிவாரண உதவிகளை வழங்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தோரின் தொகை 47 ஆக உயர்ந்திருப்பதாகவும் மாநில அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வெள்ளத்தால் கன்னியாகுமரி மாவட்டம் ஏனையபகுதிகளிலிருந்து துண்டிக்கப்பட்டிருக்கிறது அத்துடன் நாகர்கோவில் - திருநெல்வேலி நெடுஞ்சாலையும் நாகர்கோவில் கன்னியாகுமரி நெடுஞ்சாலையும் வெள்ளத்தால் மூடப்பட்டும் உள்ளன.

# ஒளிவிழா

திருநெல்வேலியிலுள்ள பலாலி ஆசிரிய கலாசாலையில் எதிர்வரும் 15ஆம் திகதி காலை 9.00 மணிக்கு ஒளி விழா நடைபெறவுள்ளது.

ம வீரர்களின்

வாகப் பொறுப்பாளர் திரு. பரா உரையாற்றுகையில் இவர்கள் கடந்த இரண்டு வருடங்களாக, பூநகரிப் பகுதியில் நிலைகொண்டு அப்பாவி மக்களை கொன்றொழித்து வந்த சிங்கள இராணுவத்தை விரட்டியடித்து வீரச்சாவை அணைத்துக்கொண்டு இங்கே உறங்கிக்கொண்டு இருக்கிறார்கள். மக்கள், எம்பின்னால் அணி திரள்வார்கள் என்ற நம்பிக்கையுடனே இவர்கள் மரணித்துள்ளார்கள். மிகக் குறுகிய நேரத்தில் ஒரு இராணுவ தளத்தையே கைப்பற்றி வித்தான இவர்களின் இலட்சியங்களை நிறவேற்ற நாம் அணிதிரள வேண்டும் என அவர் கூறினார்.

(11, 09)

(வடமராட்சி)

யாழ். மாவட்டத்தில் நடைபெறவுள்ள மூன்று பரீட்சைகளுக்கான வினாத்தாள்கள் கொழும்பில் இருந்து கல்வித் திணைக்களத்திற்கு நேற்று எடுத்துவரப்பட்டன.

எழுது வினைஞர்களுக்கான பதவிஉயர்வுப் பரீட்சை தொழில்நுட்பம் என்.எம்.ரி. பழைய பாடத்திட்டப் பரீட்சை, கணக்குப் பரிசோதகர் பரீட்சை ஆகிய பரீட்சைகளுக்கான வினாத்தாள்கள் அனுமதி அட்டைகளும் மற்றும் டிசம்பர் 6 ஆம் திகதி நடைபெறவுள்ள க.பொ.த. சாதாரணப் பரீட்சைக்குரிய காகிதாதிகளும் யாழ். கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த ஏ. சுப்பிரமணியம் அவர்களால் எடுத்துவரப்பட்டன.

(யோ)

# அமைச்சர் ரணசிங்க மீது ஒழுக்காற்று நடவடிக்கை?

[கொழும்பு]

அமைச்சர் ஏ.ஜே. ரணசிங்க மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு ஐ.தே.க. குழு தீர்மானம் எடுத்துள்ளது.

அண்மையில் ஆங்கிலப் பத்திரிகை ஒன்றிற்கு தகவல் ராஜாங்க அமைச்சர் ஏ.ஜே. ரணசிங்க வழங்கிய பேட்டியில் முன்னாள் ஜனாதிபதி தொடர்பாக தெரிவித்த கருத்துக்கள் குறித்தே இந்த ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சிரேஷ்ட அமைச்சர்களும் உறுப்பினர்களும் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க தலைமையில் கூட்டப்பட்ட செயற்குழு கூட்டத்தில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி விளக்கம் கேட்டு மேற்படி அமைச்சருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்படும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### புகைமண்டலம்

னால் செயலக கட்டடம் பயன்படுத்த முடியாத அளவுக்கு பலத்த சேதமடைந்துள்ளது. கூரைப்பகுதி முழுவதும் சுக்குநூறாக உடைந்து சிறு சிறு துண்டுகளாக ஆங்காங்கு சிதறிக்கிடக்கின்றன. கூரைப்பகுதியின் மரங்கள் ஒவ்வொன்றும் அந்தரத்தில் தொங்கிய வண்ணம் ஆங்காங்கு சிதறியும் காணப்படுகிறது.

### சுடுகாடாக காட்சி:-

அத்துடன் செயலக கட்டடத்தின் கதவுகள், யன்னல்கள் அனைத்தும் சிறு சிறு துண்டுகளாகச் சிதறிக்கிடக்கின்றன. யன்னல் கண்ணாடிகள் அனைத்தும் நொருங்கிப் போய் அங்குமிங்குமாக காணப்படுகின்றன. செயலக முன்பக்க சுவரும் பலத்த சேதமடைந்துள்ளதுடன் நூற்றுக்கணக்கான துளைகள் காணப்படுகின்றன. செயலக முன்றலில் காணப்பட்ட மரங்கள் முறிந்தும் கருகியும் காணப்படுகின்றன. அரச செயலகத்துக்கான பெயர்ப்பலகை பெயர்த்தெறியப்பட்டு சின்னாபின்னமாக சிதறிக் காணப்படுகிறது. தாக்குதல் நடந்த சில நிமிடங்களில் செயலக முன்றலை அவதானித்தபோது அனைத்துப்பகுதிகளிலும் புகைமண்டலம் மண்டிய நிலையில் சுடுகாடுபோல் காட்சியளித்தது

### சிதறிய நிலையில் செயலக ஆவணங்கள்:

செயலகததில் உள்ள அனைத்துக் கிளை அலுவலகங்களும் சேதமடைந்ததுடன் அங்கிருந்த ஆவணங்கள் பலவும் ஆங்காங்கு சிதறிய நிலையில் காணப்பட்டன. ஒவ்வொரு அலுவலகஇருக்கைகள் மற்றும் ஏனைய தளபாடங்கள் ஆகியன ஆங்காங்கு தூக்கி வீசப்பட்ட நிலையிலும் நொருங்கிய நிலையிலும் காட்சிகொடுத்தன. தளபாடங்களில் வைக்கப்பட்டிருந்த ஆவணக் கோவைகள் பலவும், பதிவுப் புத்தகங்கள் பலவும் தூக்கி வீசப்பட்டு காணப்பட்டன.

செயலக கட்டடத்தின் மேல் தளப்பகுதியில் காணப்பட்ட தண்ணீர்த்தாங்கி சேதமடைந்தமையால் அதில் நிரப்பப்பட்டிருந்த தண்ணீர் வேகமாக வெளியேறிக்கொண்டிருந்தது. இவ்வாறு வெளியேறிய நீரில் செயலகத்தின் பல ஆவணக் கோவைகள் நீச்சலடித்துக் கொண்டிருந்தன.

### செயலகத்தில் இரத்தக்கறை:

குண்டுத் தாக்குதல் நடைபெற்ற சமயம் செயலகத்தில் கடமையில் இருந்த அரச அதிபர் உட்பட ஊழியர்கள் பலர் காயமடைந்தனர். இவர்கள் காயமடைந்ததினால் இவர்களது இரத்தம் செயலகத்தின் பலபகுதிகளிலும் சிந்தப்பட்டுக் காணப்பட்டது. செயலகத்தின் மேற்தளத்திலும் கீழ்தளத்திலும் செயலக முன்றலிலும் இரத்தக்கறைகள்காணப்பட்டன. ஊழியர்களது கைப்பைகளும் பாதணிகளும், துவிச்சக்கரவண்டிகளும் ஆங்காங்கு தூக்கிவீசப்பட்டு சிதறிக் காணப்பட்டன.

செயலகத்துக்கு அண்மையில் உள்ள ஒரு சில வீடுகளும் கட்டடங்களும் இத்தாக்குதலில் சேதமடைந்துள்ளன.

(க)

## யாழ் செயலக பகுதியில் 22 பேர் படுகாயம்

(நமது நிருபர்)

யாழ் செயலகத்தின் மீது நேற்றுக்காலை 8.15 மணியளவில் சுப்பர்சொனிக் விமானம் மேற்கொண்ட கண்மூடித்தனமான குண்டுத்தாக்குதலுக்கு யாழ் அரசாங்க அதிபர் உட்பட செயலகத்தில் பணிபுரிவோர் ஆறுபேர் காயமடைந்து யாழ்போதனா மருத்துவ மனைக்கு கொண்டுவரப்பட்டனர். மேலும் பலர் சிறு காயங்களுக்கு உள்ளானார்கள் செயலகக்கட்டடம் பலத்த சேதமடைந்தது வீதியால் போக்குவரத்திலீடுபட்டிருந்தவர்களும் வீடுகளில்இருந்தவர்களுமாக 16 பொதுமக்களும் காயமடைந்தனர்.

மேற்படிசம்பவத்தின்போது காயமடைந்தவர்கள் யாழ் போதனா மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்டு,சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர் இவர்களுள் சிலரைத் தவிர ஏனையோர் சிகிச்சையின்பின் வீடுதிரும்பினர். செயலகத்தை சேர்ந்த காயமடைந்தவர்கள் விபரம் வருமாறு. யாழ். அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர், எம். புவனேந்திரன் [ஓய்வூதியர் கணக்குப்பகுதி எழுதுவினைஞர்] சதாசிவம் பிறேம்குமார் [புனர் வாழ்வு புனர் நிர்மாணப்பகுதி எழுதுவினைஞர்], கணபதிப்பிள்ளை சிவபாதம் [எழுதுவினைஞர்], காசிப்பிள்ளை [யாழ்செயலகம்] பூபாலசிங்கம் [யாழ்செயலகம்] ஆகியோரே காயமடைந்து யாழ்போதனா மருத்துவ மனையில் சிகிச்சைபெற்றவர்களாவர்.

இக்குண்டுத்தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்தபொதுமக்கள் விபரம் வருமாறு. வே. கதிர்காமு (கைதடி ப, நோ, கூ, சங்க இயக்குனர் சபை உறுப்பினர்) இவர்யாழ் அரசாங்க அதிபரை சந்திப்பதற்காக செயலகத்திற்கு வந்தபோது காயமடைந்தார். கணேஸ் (ஈமனத்திடல் முகுங்கன்), சந்திரகுலசிங்கம், வர்ணம், கோபாலபிள்ளை, வேலுபரமசிவம், வ. சந்திரன் (அரியாலை சாம்சன் குடியிருப்பு), சுவாம்பிள்ளை, சிறிரஞ்சன், இந்துசாமினி, அன்ரன், யோகேஸ்வரன் (கஸ்தூரியார் வீதி, யாழ்), பிரதீபன் (அரியாலை), கண்ணன், எஸ் செல்வராணி (ஸ்ரான்லி வீதி, வதனக்குமார் (புத்தூர் கிழக்கு) ஆகியோரே காயமடைநதவர்களாவர். [சி]

## படிக்கட்டில் வீழ்ந்து உருண்டு கீழே வந்தேன்

### செயலக ஊழியர் விபரிப்பு

(நமது நிருபர்)

சுப்பசொனிக் போர் விமானம் முதலில் வீசிய குண்டு வீழ்ந்து வெடித்ததும் செயலக கட்டடமே அதிர்ந்தது உடனே நான்மேல்மாடியில்இருந்துமுன் பக்க படிக்கட்டு வழியாக இறங்கிக் கொண்டிருக்கும்போது இரண்டாவது குண்டு பெரும் சத்தத்துடன் வெடித்தது. அப்போது கூரைசீற்றுகள் துண்டு துண்டாகி என்மீது விழுந்தது எங்கும் ஒரே புழுதிமயமாக கிடந்ததுநான்படிக்கட்டுகளில் உறுண்டுறுண்டு கீழேவந்து விழுந்தேன் இவ்வாறு நேற்று சுப்பசொனிக் விமானம் செயலகத்தின் மீது நடாத்தியகுண்டுத்தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்து தப்பியசெயலக ஊழியரான பிறேம்குமார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் நான் படிக்கட்டுகளில் உருண்டு உருண்டு கீழ்ப்பகுதியில் வந்து விழுந்தபோது என்னுடைய பிள்ளைகளையேநினைத்தேன் என்மீது சீற்றுத் துண்டுகளும் வேறுபலபொருள்களும் விழுந்தன எங்கும் ஒரே புகைமண்டலமாக தூசி எழும்பியிருந்தது எந்தப்பக்கத்தால் வெளியே போவதென்று தெரியவில்லை அப்போது வாயெல்லாம் ஒரே மண்ணாக இருப்பதை உணர்ந்து எச்சிலை வெளியே துப்பியபோது அதுமண்பாணியாக வெளியே வந்தது எங்கும் ஒரே கூக்குரலாக கேட்டது எல்லோரும் என்னைத்தாண்டி ஓடிக்கொண்டிருந்தனர் நான் சிறிது நேரத்தின் பின்னர் ஒருவாறு வெளியே வந்துபார்த்தபோது செயலக கட்டடத்தின் முன் பகுதிஇடிந்துதொங்கிக்கொண்டிருந்ததுஅப்போது நான் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளேன்என்பதைஅறிந்தேன் என்றார் அவர். (சி)

## உள்வந்து வெளிச் சென்ற வாகன இலக்கங்கள்

## புலிகளின் தாக்குதலால் தரையிறங்க முடியவில்லை

### சண்டேரைம்ஸ் ஆசிரியர்

(லண்டன்)

''பூநகரி பகுதிக்கு மேலதிகப் படைகள் அனுப்பப்பட்டுள்ளபோதிலும் படைகள் அங்கு தரையிறங்க காலநிலை இடையூறாக இருக்கின்றது. அத்துடன் புலிகளின் தாக்குதல் வலுவும் அதிகமாக உள்ளது. காயமடைந்த படையினரை மீட்டு கொழும்பு கொண்டு செல்வதற்கும் தடையாக காலநிலை உள்ளது. காயமடைந்த பல படையினர் இதனால் அங்கேயே இறந்து வருகின்றனர்.'' இவ்வாறு சண்டேரைம்ஸ் பத்திரிகையின் ஆசிரியர் லலித் அழகக்கோன் பி. பி. ஸிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

பூநகரியில் தற்போதைய நிலை என்ன என்று கேட்கப்பட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார், அப்பேட்டி விபரம்;

கேள்வி: அத்தளத்தில் எத்தனைபேர் பலியாகினர் என்று சரியான விபரம் உங்களுக்கு கிடைத்ததா?

பதில்: உறுதியான செய்தி ஒன்றுமில்லை. 250முதல் 300வரையிலான படையினர் இறந்துள்ளனர்

கேள்வி: இத் தாக்குதல் குறித்து என்ன கூறுகிறீர்கள்?

பதில்: இது அவர்களின் மிக மோசமான தாக்குதல். மாங்குளத்தாக்குதலில் 197படையினர் மட்டுமே இறந்தனர். இது இராணுவம் கெரிலாக்களுடன் நடத்தும் போரில் மோசமான சந்திப்பை எதிர்கொண்டிருக்கின்றது இம்முகாமில் 1500படையினர் இருந்தனர்.

கேள்வி: அரசியல் தீர்வு ஏதும் காண்பது குறித்து உங்கள் கருத்து என்ன?

பதில்: விடுதலைப் புலிகளுடன் சமரசம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்கும் ஆனால் அதேசமயம் புலிகள் இராணுவரீதியாக பலமிழக்கச் செய்யப்படவேண்டும் என கருதுகிறேன். ஏனெனில் அவர்கள் இப்போது பூநகரி மூலம் சக்திபெற்றுள்ளனர் என்றார். சண்டேரைம்ஸ் பத்திரிகை ஆசிரியர் அழகக்கோன்

## நானும் ஊழியர்களும் மயிரிழையில் தப்பினோம்

### யாழ். அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யுத்த விமானங்கள் நடாத்திய முதலாவது குண்டுத்தாக்குதலிற்கு எனது மேசையின் கீழ் மறைந்து கொண்டேன். இரண்டாவது தாக்குதலின் போது நான் தூக்கி வீசப்பட்டேன். இத்தாக்குதலில் நானும் எனது அலுவலக ஊழியர்களும் மயிரிழையில் உயிர்தப்பியுள்ளோம்.'' இவ்வாறு யாழ். அரசாங்க அதிபர்திரு. கா. மாணிக்கவாசகர் தெரிவித்தார். நெஞ்சில் ஏற்பட்ட காயத்துக்கு சிகிச்சை பெற்று வீடு திரும்பிய அரசாங்க அதிபர் எமது செய்தியாளருடன் உரையாடினார். மேற்படி விமானத்தாக்குதலினால் காயமடைந்த அரச அதிபர் அரசின் மீது கோபமடைந்த நிலையில் காணப்பட்டார்.

இச்சம்பவம் குறித்து அரச அதிபர்மேலும்தெரிவிக்கையில் வழமைபோல காலை எனது அலுவலகத்தில் கடமையில் ஈடுபட்டிருந்தேன், சற்றும் எதிர்பார்க்காத வகையில் சுப்பர்சொனிக்விமானம்ஒன்று திடீரென பேரிரைச்சலுடன் வந்து குண்டு ஒன்றை செய வீழ்ந்து வெடித்தது. இக்குண்டு வெடித்த அதிர்ச்சியால் நான் நின்ற இடத்தில் இருந்து தூக்கிவீசப்பட்டேன். தூக்கிவீசப்பட்ட நான் அருகிலிருந்த சுவர் ஒன்றுடன் மோதுண்டேன். இதனால் எனது உடலில் வலி ஏற்பட்டது. அதையும் பொருட்படுத்தாது ஓடிச்சென்றேன். சிறிது நேரத்தில் எனது உடலில் காயம் ஏற்பட்டிருப்பதையும் எனது ஆடை இரத்தத்தினால நனைந்திருந்ததையும் உணர்ந்து கொண்டேன. இதன்பின்னர் அவசர அவசரமாக மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை பெற்றுக் கொண்டேன் என்று குண்டுத் தாக்குதல் அதிர்ச்சியில் இருந்து விடுபடாத நிலையில் பதற்றத்துடன் தெரிவித்தார்.

இத்தாக்குதலின் போது நானும் எனது அலுவலக ஊழியர்கள் பலரும் மரணமடைவது மயிரிழையிலேயே தவிர்க்கப்பட்டது.

### மகனும் உயிர் தப்பினார்

இத்தாக்குதலின்போது நான் மட்டுமல்ல எனது மகனும் மயிரிழையில் உயிர்தப்பியுள்ளார் வீதியால் சென்று ...பிக் கொண்டேன் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## தாக்குதலுக்கு காரணம் அரச அதிபர் கோருகிறார்

(யாழ்ப்பாணம்)

''சுமார் இருபத்தைந்துமைல்களுக்கு அப்பால் உள்ள பகுதியில யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது யாழ். அரச செயலகத்தின்மீது யுத்த விமானங்களைக் கொண்டு குண்டுத்தாக்குதல் நடாத்தப்படவேண்டியதன் தேவை என்ன?'' இவ்வாறு குண்டு வீச்சில் காயமடைந்த யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் திரு. ஹமில்டன் வணசிங்காவிடம் காரணம் கேட்டுள்ளார்.

யாழ் செயலகம் மீதான குண்டுத்தாக்குதலில் காயமடைந்த அரசாங்க அதிபர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுத் திரும்பியதும் மேற்படிகுண்டுத்தாக்குதல்குறித்து அவசர வானொலித் தகவல் ஒன்றை அனுப்பிவைத்தார்.

செயலகம்மீது நடாத்தப்பட்ட குண்டுத் தாக்குதலுக்கு உரிய காரணத்தையும், விளக்கத்தையும் தனக்கு உடனடியாகத் தரும்படி மேற்படி வானொலிச்செய்தியில் அரச அதிபர் கேட்டிருக்கின்றார். செயலகத்தின் மீதான நேற்றைய குண்டுத்தாக்குதல் குறித்தும், இத்தாக்குதலின்போது அரசாங்க அதிபர் உட்பட பல அரச ஊழியர்கள் காயமடைந்திருப்பது குறித்தும், செயலகக் கட்டடம் பலத்தசேதமடைந்திருப்பது குறித்தும்ஜனாதிபதிதிரு. டி. பி. விஜேதுங்காவுக்கும்அறிவிக்கப்பட்டிருக்கிறது

## புகைமண்டலம் மூடிய இருகாடாக காட்சியளித்தது

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா விமானப்படையினரின் ''சுப்பர்சொனிக்'' ரக யுத்த விமானங்களின் குண்டுத்தாக்குதல்களால் யாழ். மாவட்ட அரச அதிபர் உட்பட செயலக ஊழியர்கள் பலர் காயமடைந்துள்ளனர். அத்துடன் செயலக கட்டடம் பலத்த சேதமடைந்துள்ளதுடன் தளபாடங்கள் மற்றும் ஆவணங்கள் பலவும் சேதமடைந்துள்ளதால் அரச செயலகம் செயலிழந்துள்ளது.

நேற்றுக்காலை 8.30 மணியளவில் சிறிலங்கா விமானப் படைக்குச் சொந்தமான இரண்டு சுப்பர்சொனிக் ரக குண்டு வீச்சு விமானங்கள் யாழ். அரச செயலகத்தின் மீது குண்டுத்தாக்குதல்களை நடாத்தின இத் தாக்குதலின் போது இரண்டு குண்டுகள் செயலகத்தின்மீது வீசப்பட்டன. செயலக பிரதான வாயிலில் இருந்து ஒருசில யார் முன்பாக இவ்விரு குண்டுகளும் வீழ்ந்து வெடித்தன.

**செயலகம் செயலிழந்தது:-**

இக குண்டுத்தாக்குதல்களி

[7ஆம் பக்கம் பார்க்க)

## மாவீரர்களின் புகழுடலுக்கு பெருமளவு மக்கள் அஞ்சலி

பூநகரியில் இராணுவ, கடற்படக் கூட்டுப் படைத் தளத்தை நிர்மூலமாக்கி வீரச்சாவை அணைத்துக் கொண்ட வேங்கைகளின் அஞ்சலி நிகழ்வும், கூட்டமும் வலிகாமம் பகுதியில் இணுவில் மத்திய கல்லூரியில் நடைபெற்றது. நேற்று மாலை 3-30 மணியிலிருந்து, 11 வேங்கைகளின் வித்துடல்கள் மக்களின் அஞ்சலிக்காக விசேடமாக அலங்கரிக்கப்பட்ட மேடைகளின் மேல் வைக்கப்பட்டிருந்தன. பெருந்திரளான பொதுமக்கள் கொட்டும் மழையிலும் கூடி நின்று கண்ணீரஞ்சலி செலுத்தினர். அஞ்சலி நிகழ்வைத் தொடர்ந்து இடம்பெற்ற நிர்வாகப் பொறுப்பாளர் திரு பரா, விடுதலைப் புலிகள் மகளிரமைப்பின் யாழ். மாவட்ட பொறுப்பாளர் செல்வி தணிகைச் செல்வி, விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் திரு. தேவர் ஆகியோர் உரையாற்றினர். அஞ்சலி உரைகளைத் தொடர்ந்து, பாண்ட் வாத்திய இசையுடனும், இராணுவ அணிவகுப்புடனும், கோண்டாவில் வழியாக கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு வித்துடல்கள் கொண்டு செல்லப்பட்டன.

அஞ்சலி உரையில் நீதி நிர்

(7ஆம் பக்கம் பார்க்க)

## மரண அறிவித்தல்கள்

### செல்வி செல்லையா உதயராணி

வீரவேங்கை விஜயா [புமகள்]

இரண்டாவது குண்டு பெரும் சத்தத்துடன் வெடித்தது. அப்போது கூரைசிற்றுகள் துண்டு துண்டாகி என்மீது விழுந்தது எங்கும் ஒரே புழுதிமயமாக கிடந்ததுநான்படிக்கட்டுகளில் உறுண்டுறுண்டு கீழேவந்து விழுந்தேன் இவ்வாறு நேற்று சுப்பசொனிக் விமானம் செயலகத்தின் மீது நடாத்தியகுண்டுத்தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்து தப்பியசெயலக ஊழியரான பிறேம்குமார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் நான் படிக்கட்டுகளில் உருண்டு உருண்டு கீழ்ப்பகுதியில் தெரியவில்லை அப்போது வாயெல்லாம் ஒரே மண்ணாக இருப்பதை உணர்ந்து எச்சிலை வெளியே துப்பியபோது அதுமண்பாணியாக வெளியே வந்தது எங்கும் ஒரே கூக்குரலாக கேட்டது எல்லோரும் என்னைத்தாண்டி ஓடிக்கொண்டிருந்தனர் நான் சிறிது நேரத்தின் பின்னர் ஒருவாறு வெளியே வந்துபார்த்தபோது செயலக கட்டடத்தின் முன் பகுதிஇடிந்துதொங்கிக்கொண்டிருந்ததுஅப்போது நான் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளேன்என்பதைஅறிந்தேன் என்றார் அவர். (சி)

## உள்வந்த வெளிச் சென்ற வாகன இலக்கங்கள்

## 12-11-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 11587

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

26-6505, 26-3582, 24-4207, 22-9133, 43-4170, 24-5416, 24-5437, 24-6855, 42-3419, 40 1617, 28-5484, 26-1253, 22-7862, 24-3594, 42 962, 43-4045, 26-7217, 40-0770, 26-3962, 41-9663.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

இல்லை.


## தேவை

யாழ். நகரில் பிரபல்யமுள்ள புகைப்பட நிலையத்தில் பணிபுரிய, புகைப்படத் துறையில் சகல அனுபவமுள்ள ஒருவர் உடன் தேவை.

விண்ணப்ப முடிவு: 15. 11. 93

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

**இலக்கம் 14, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(சி-7872)


## கண்ணீர் அஞ்சலி

### மகாஜனா அன்னை கண்ணீர் வடிக்கிறாள்

பூநகரி படைத்தளத்தை தகர்த்து வரலாற்றுச் சாதனை படைத்து வீரச்சாவெய்திய எமது கல்லூரி மைந்தர்களிற்கும், ஏனைய மண்ணின் புதல்வர்களிற்கும் எமது வீர அஞ்சலிகள்.

மகாஜனா கல்லூரி
அதிபர், ஆசிரியர்கள்
மாணவர்கள்

[6570]


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் கேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


உயிர்தப்பியுள்ளோம்'' இவ்வாறு யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் தெரிவித்தார். நெஞ்சில் ஏற்பட்ட காயத்துக்கு சிகிச்சை பெற்று வீடு திரும்பிய அரசாங்க அதிபர் எமது செய்தியாளருடன் உரையாடினார். மேற்படி விமானத்தாக்குதலினால் காயமடைந்த அரச அதிபர் அரசின் மீது கோபமடைந்த நிலையில் காணப்பட்டார்.

இச்சம்பவம் குறித்து அரச அதிபர்மேலும்தெரிவிக்கையில் வழமைபோல காலை எனது அலுவலகத்தில் கடமையில் ஈடுபட்டிருந்தேன். சற்றும் எதிர்பார்க்காத வகையில் சுப்பர்சொனிக்விமானம்ஒன்று திடீரென பேரிரைச்சலுடன் வந்து குண்டு ஒன்றை செயலக மூன்றலில் வீசியது. குண்டுச்சத்தம் கேட்டதும் எனது மேசையின் கீழ் புகுந்துகொண்டேன் சிறிது நேரத்தில் ''பொலு'' ''பொலு'' என்ற சத்தங்கள் கேட்டன. கூரைத் தகடுகளும் யன்னல்கண்ணாடிகளும் அங்குமிங்குமாகச் சிதறிக் கொண்டிருந்தன. புகை மண்டலம்மேலெழுந்துகொண்டிருந்தது. பின்னர் சில வினாடிகள் அமைதி நிலவியது. நான் உடனடியாக அங்கிருந்து வெளியேறி கட்டடத்தின் கீழ்த்தளத்திற்குச் சென்று கொண்டிருந்தேன். அப்போது இரண்டாவது 'தடவையாக வீசப்பட்ட குண்டு செயலக பிரதானவாயிலுக்கண்மையில்

அமைச்சர்

விட்டதால் இந்த துன்பம் தொடர்கிறது என சிறிமாவோ அப்போது தெரிவித்தார்.

பாதுகாப்புப் படையினர் தமது போர் உத்திகளை பலப்படுத்த வேண்டும் எனவும் அவர் அரசுக்கு ஆலோசனை கூறினார்.

சுப்பர்சொனிக்

சேதமடைந்தது. அரசாங்க அதிபரின் அலுவலக அறை முற்றாகச் சேதமடைந்தது. அவர் அங்கிருந்து இரண்டாவது குண்டு விழுவதற்கு முன்னரே படிகள்மூலம் கீழே இறங்கிக்கொண்டிருந்ததால் மயிரிழையில் உயிர் தப்பினார்.

இக் குண்டுத் தாக்குதலுக்கு இலக்கான செயலக கட்டடத்தின் மேல் கூரை முற்றாகச் சேதமடைந்ததுடன் மேற்பகுதியில் உள்ள தண்ணீர்த் தாங்கியும் சிதறுண்டது. இதனால் அதனுள் இருந்த நீர் வெளியேறியதில் பல ஆவணங்கள் சேதமடைந்தன. அதேவேளை கட்டடத்தின் கீழ்ப்பகுதி யன்னல்கள், கதவுகள் உடைந்து தூக்கிவீசப்பட்டன. (சி)

நேரத்தில் எனது உடலில் காயம் ஏற்பட்டிருப்பதையும் எனது ஆடை இரத்தத்தினால நனைந்திருந்ததையும் உணர்ந்து கொண்டேன். இதன்பின்னர் அவசர அவசரமாக மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை பெற்றுக் கொண்டேன் என்று குண்டுத் தாக்குதல் அதிர்ச்சியில் இருந்து விடுபடாத நிலையில் பதற்றத்துடன் தெரிவித்தார்.

இத்தாக்குதலின் போது நாலும் எனது அலுவலக ஊழியர்கள் பலரும் மரணமடைவது மயிரிழையிலேயே தவிர்க்கப்பட்டது.

**மகனும் உயிர் தப்பினார்**

இத்தாக்குதலின்போது நான் மட்டுமல்ல எனது மகனும் மயிரிழையில் உயிர்தப்பியுள்ளார் வீதியால் சென்று கொண்டிருந்த எனது மகன் தாக்குதலின் போது தற்காப்பில் ஈடுபட்டதால் உயிர் தப்பினார்.

**இது இரண்டாவது தடவை:**

விமானப்படையினரது குண்டுத்தாக்குதலில் நான் மயிரிழையில் உயிர் தப்பியது இது இரண்டாவது தடவையாகும். நான் கிளிநொச்சியில் கடமையாற்றும்போது எனது வீட்டின் மீதும் இவ்வாறான குண்டுத் தாக்குதல் நடாத்தப்பட்டது. அப்போதும் நான் மயிரிழையில் உயிர் தப்

ஜனாதிபதி

விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

பூநகரியில் கடும் சண்டை நடக்கிறது. இது பற்றி என்னால் இப்போது எதுவும் கூற முடியாது. ஆயுதப்படை தளபதிகள் வடக்கு சென்று அங்கிருந்து நடவடிக்கைகளை மேற்பார்வையிடுகின்றனர் அத்துடன் மேலும் என்ன நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது குறித்தும் கலந்துரையாடுகின்றனர் எனவும் பிரதமர் ரணில் கூறினார்.

பூநகரி சம்பவம் தொடர்பாக விரிவான அறிக்கை விரைவில் கிடைக்கும் எனவும் அவர் பாராளுமன்றத்தில் நேற்று தெரிவித்தார்.

இரவிரவாக

வங்கள் பூநகரி முகாம் பகுதியை மையமாகக் கொண்டு அகோர குண்டுவீச்சு தாக்குதல்களை நடாத்தியவண்ணமிருந்தன. இத் தாக்குதல் சம்பவமானது பலமணி நேரங்களாக நீடித்தது.

இதேவேளை நேற்று பகல் முழுவதும் கடற்படை பீரங்கிப்படகுகள் இப் பகுதியை நோக்கி பீரங்கித் தாக்குதலை நடாத்தியவண்ணம் இருந்தன.

# பெருமளவு மக்கள் அஞ்சலி

பூநகரியில் இராணுவ, கடற்படக் கூட்டுப் படைத் தளத்தை நிர்மூலமாக்கி வீரச்சாவை அணைத்துக் கொண்ட வேங்கைகளின் அஞ்சலி நிகழ்வும், கூட்டமும் வலிகாமம் பகுதியில் இணுவில் மத்திய கல்லூரியில் நடைபெற்றது. நேற்று மாலை 3-30 மணியிலிருந்து, 11 வேங்கைகளின் வித்துடல்கள் மக்களின் அஞ்சலிக்காக விசேடமாக அலங்கரிக்கப்பட்ட மேடைகளின் மேல் வைக்கப்பட்டிருந்தன. பெருந்திரளான பொதுமக்கள் கொட்டும் மழையிலும் கூடி நின்று கண்ணீரஞ்சலி செலுத்தினர். அஞ்சலி நிகழ்வைத் தொடர்ந்து இடம்பெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் நீதி நிர்வாகப் பொறுப்பாளர் திரு பரா, விடுதலைப் புலிகள் மகளிரமைப்பின் யாழ். மாவட்ட பொறுப்பாளர் செல்வி தணிகைச் செல்வி, விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் திரு. தேவர் ஆகியோர் உரையாற்றினர். அஞ்சலி உரைகளைத் தொடர்ந்து, பாண்ட் வாத்திய இசையுடனும், இராணுவ அணிவகுப்புடனும், கோண்டாவில் வழியாக கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு வித்துடல்கள் கொண்டு செல்லப்பட்டன.

அஞ்சலி உரையில் நீதி நிர்


(7ஆம் பக்கம் பார்க்க)


## இராணுவத்தில் சந்தேகம்

சிறிலங்கா இராணுவத்தினால் எல்லைப்பகுதியைக்கூட பாதுகாப்பது கடினமாக இருக்குமோ என்ற சந்தேகம் ஏற்படுவதாக ஓய்வு பெற்ற சிறிலங்கா விமானப்படைத் தளபதி ஹரிகுணதிலக்க கருத்து தெரிவித்தார். பூநகரி இராணுவ முகாம் விடுதலைப்புலிகளிடம் வீழ்ந்தது குறித்து கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

வடபகுதியில்புலிகளுக்கு எதிராகஇராணுவநடவடிக்கையை மேற்கொள்ளாவிட்டாலும் எல்லைப் பகுதியை பாதுகாப்பது இராணுவத்திற்கு கடினமாக இருக்குமோ எனும் சந்தேகம் எழுகின்றது என்றார் ஹரிகுணதிலக்க

சகாக்களை

தளத்திலிருந்து 58படையினர் ஆனையிறவு முகாமை சென்றடைந்துள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

இவ்வாறு ஆனையிறவு சென்றடைந்த படையினரும் 46கடற்படையினரும் 12இராணுவத்தினரும் அடங்குவர் என தெரிவித்த அவர் இவர்கள் கடல்நீரேரியை கடந்து ஆனையிறவு முகாமை வந்தடைந்ததாகத் தெரிவித்தார்.

இதேவேளை புலிகளால் தாக்கி அழிக்கப்பட்ட பூநகரி படைமுகாமில் எஞ்சிய படையினரை மீட்க இராணுவ தளபதிகள் முயற்சித்த போதிலும் அதற்கு காலநிலை இடையூறாக இருப்பதாக கொழும்பில் இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார். தொடர்ந்து இப்பகுதியில் கடும் மோதல் நடைபெறுவதாகவும் அவர் தெரிவித்தார்.

# மரண அறிவித்தல்கள்

## செல்வி செல்லையா உதயராணி

### வீரவேங்கை விஜயா [பூமகள்]

புங்குடுதீவு 6, இறுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் பிரம்படியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி செல்லையா உதயராணி பூநகரி மோதலில் வீரச்சாவடைந்துவிட்டார். இவர் அம்பலவாணர் செல்லையா உருத்திராதேவி (மகேஸ்வரி) யின் அன்பு மகளும் உதயகுமார், உதயபவானி, உதயரஜனி, உதயரமா, சசிகலா ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவராசலிங்கம், கமலானந்தன், பாக்கியநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், கஜாயினி, சோபசாலினி, சகானா, அர்ச்சனா, டினேஜா ஆகியோரின் சிறிய தாயாரும், திரு. திருமதி ஆறுமுகம் ஆகியோரின் பெறாமகளும், தவகுமார், தவகரன் ஆகியோரின் சகோதரியுமாவர்.

தயவுசெய்து இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

36/17, பிரம்படி ஒழுங்கை,
கொக்குவில்.

தகவல்:
அ. செல்லையா
(தந்தை)

(6569)

## செல்வி சிவாஜினி சிவபாதம்

### [பத்மசுகி]

புங்குடுதீவு 1ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சிவபாதம் சிவாஜினி 11 11 93இல் வீரச்சாவு அடைந்துள்ளார். இவர் திருநாவுக்கரசு - மோகனராணியின் பெறாமகளும் பத்மசிறி (மாவீரர்), திருக்குமரன் (போராளி), சிவமாறன், வாதவூரன், முரளிதரன், துர்க்கா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலம் சென்ற கே. வி. எஸ். நாகலிங்கம் (சாமியார்) சிரோன்மணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பாலச்சந்திரன், விஜயரத்தினம்(சுவிஸ்), மகேந்திரன் (சுவிஸ்) ஆகியோரின் சிறிய மகளும், கமலாதேவியின் மருமகளும் ஆவார். மாவீரரின் இறுதி அஞ்சலி விபரம் பின்னர் அறிவிக்கப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

536/1 கே. கே. எஸ். றோட்,
புனிதா கட்டடம்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
நா. தடாகைப்பிராட்டி
(அன்ரி)

(6571)